**சுருக்கம்**

**தொழில் துறை – தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் – கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மின்னணுவியல் உற்பத்தி வளாகம் அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.**

---

**<u>தொழில் (எம்.ஐ.இ.1)துறை</u>**

**அரசாணை (டி) எண் 115** **நாள்: 31.07.2014**
**ஜய, ஆடி 15,**
**திருவள்ளுவர் ஆண்டு –2045**

**ஆணை:**

24.07.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் தொழில் வளர்ச்சி திட்டம் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:

> “மின்னணுவியல் துறையின் உட்கட்டமைப்பு மற்றும் உற்பத்தி ஆகியவைகளை தமிழ்நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களுக்கும் விரிவாக்கம் செய்யும் நோக்கத்தோடு, மின்னணுவியல் உற்பத்தி வளாகம் ஒன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 527 ஏக்கர் பரப்பளவில் 920 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய அரசின் தேசிய மின்னணுவியல் கொள்கையின் அடிப்படையில், டிட்கோ மற்றும் G.M.R. Infrastructure நிறுவனம் ஆகியவை இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தும். 527 ஏக்கர் நிலப்பரப்பில் 65 சதவிகித இடம் மின்னணுவியல் நிறுவனங்கள் நிறுவுவதற்கான உற்பத்தி சார்ந்த பகுதியாகவும், மீதமுள்ள இடம் உற்பத்தி சாரா பகுதியாகவும் அமைக்கப்படும். இத்திட்டத்திற்கான கொள்கை அளவிலான ஒப்புதலை மைய அரசு வழங்கியுள்ளது. இத்திட்டம் சுமார் 7,000 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்ப்பதோடு, சுமார் 40,000 நபர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை வழங்கும்.”

2. மேற்குறிப்பிட்ட தொழில் வளர்ச்சித் திட்டத்தினை மைய அரசின் மின்னணுவியல் உற்பத்தி தொகுப்பு திட்டங்களுக்கான வழிகாட்டுதல்களின்படி செயல்படுத்தவும், இத்திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மற்றும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்பவும் டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநருக்கு அறிவுறுத்தி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. வி. சங்கர்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
டிட்கோ,
19–ஏ, ருக்மணி –இலட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
நகல்
தொழில் (வசெதி) துறை, சென்னை – 600 009.
தொழில் (அநமு.2) துறை, சென்னை – 600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்